# நான் இன்னும் ஒரு ஆண்டு மட்டுமே உயிர் வாழ்வேன் என்றால்

*பல வியாபாரங்களில், ஆண்டின் தொடக்கத்தில் இருப்பு முதல் பட்டியல் சரி பார்க்கப் படுகின்றது. நமது தனிப்பட்ட இருப்பு முதல் பற்றி சரி பார்க்கவும் இது மிகச் சிறந்த வேளையாக உள்ளது. இந்தப் பாடமானது இதைக் கேட்பவர் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையை நெருங்கி நோக்கும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

இன்னொரு ஆண்டு கடந்து போயுள்ளது. மணி ஆடியினூடே பன்னிரெண்டு மாதங்கள் கடந்து போயிருக்கின்றன, அவை ஒருக்காலும் திரும்பக் கொண்டு வரப்பட முடியாது. 2003 ஆம் ஆண்டின் நாட் காட்டியில் (மாதங்களின்) பக்கங்களை மீண்டும் ஒட்ட வைக்க முயற்சிப்பது எந்த நன்மையும் செய்யாது, அல்லது கடியாரத்தின் முட்களைப் பின்னோக்கித் திருப்புவதென்பது ஏதொன்றையும் நிறைவேற்றப் போவதில்லை. 2003ஆம் ஆண்டானது, என்றென்றைக்குமாகக் கடந்து போய் விட்டது, இதை மாற்ற முடியாது.

இருப்பினும், தேவன் நமக்குப் புதிய ஆண்டு ஒன்றைக் கொடுத்துள்ளார் - இது புதியதாக, அவருடைய காலத்தின் இருப்பறையில் இருந்து புதியதாக வார்க்கப்பட்டதாக உள்ளது. இது 365 நாட்களை, அதாவது 8760 மணிகளை அதாவது 525,600 பொன்னான நிமிடங்களைக் கொண்டதாக உள்ளது. இதைக் கொண்டு நாம் என்ன செய்வோம் என்பதே கேள்வியாக உள்ளது. ஒரு கருத்தில் கி.பி. 2004ம் ஆண்டு கர்த்தருக்கு உரியதாக உள்ளது. “A. D.,” anno Domini என்றால் ‘‘நமது கர்த்தரின் ஆண்டில்” என்று அர்த்தப்படுகின்றது. இன்னொரு கருத்தில், இந்த ஆண்டு - பயன்படுத்தவோ அல்லது வீணாக்கவோ - நமக்கு உரியதாக உள்ளது.

ஒரு புதிய ஆண்டின் விலையேறப் பெற்ற தன்மையை மனதில் ஆழப் பதிய வைப்பதற்கு நாம் பின்வரும் ஆய்வுப் பொருளை ஆழ்ந்து சிந்திக்க விரும்புகின்றோம்: “நான் இன்னும் ஒரு ஆண்டு மட்டுமே உயிர் வாழ்வேன் என்றால்.’’ உங்களிடத்தில் ஒரு மருத்துவர், ‘‘உங்கள் விஷயங்கள் யாவற்றையும் நீங்கள் ஒழுங்கு படுத்துங்கள்; இன்னும் ஒரு ஆண்டு மட்டுமே நீங்கள் உயிர் வாழ்வீர்கள்” என்று கூறினால் எப்படியிருக்கும்? இது நடக்க முடியும் என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். ‘‘நாளைய தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை

*அறியாயே" (நீதி. 27:1). "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" (யாக். 4:14). நாம் வாழ்வதற்குக் கொஞ்சக் காலம் தான் உள்ளது என்று அறிந்தால் அது நமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தச் சாத்தியம் கொண்டிருப்பதில்லையா?*

*மரணத்தை எதிர்கொள்ளுதல் என்பது மக்களில் சிலரை மதியீனமாய் நடந்து கொள்ளச் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, நன்கறியப்பட்ட ஒரு கொலைகாரன் மரண தண்டனை பெற்ற பொழுது, அவன் முடிவுவரை "எதிர்ப்பவனாக மற்றும் பேசாதவனாக" இருந்தான் என்பதாகச் செய்திப் பத்திரிகைகள் அவனைப் பற்றிக் கூறின. மரணத்தின் சாத்தியக் கூறானது மக்களை மதியீனமாய்ச் செயல்பட வைக்கின்றது என்பதற்கு கலிஃபோர்னி யாவில் உள்ள வின்செஸ்ட்டர் வீடு என்பது இன்னொரு விவரிப்பாக உள்ளது. பல கோடிக்கணக்கான பணச் செலவில் அதைக் கட்டி முடிக்க முப்பத்தாறு ஆண்டுகளாயிற்று. அது நூற்றுக்கணக்கான அறைகளைக் கொண்டுள்ளது, அவற்றில் பல இறக்குமதி செய்யப்பட்ட அரிய வகை மரங்களால் ஏற்படுத்தப்பட்டன. திருமதி சாரா வின்செஸ்ட்டரிடம் "குறி சொல்பவன்" ஒருவன், அந்தப் பெண்மணி (எதையாவது) கட்டி எழுப்பிக் கொண்டிருக்கும் வரையில் இறக்க மாட்டார்கள் என்று கூறியிருந்ததால் இந்தப் பேரார்வம் வந்தது.*

*மரணத்தின் உண்மை நிலையை எதிர்கொள்ளுதலானது நம்மில் பெரும்பாலோரை நமது வாழ்வைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கக் - மற்றும் தேவையான மாற்றங்களைச் செய்ய - காரணமாகின்றது என்பது நிச்சயம். எசேக்கியா அரசர் மரணத்திற்கேதுவாக வியாதிப்பட்டுக் கிடந்த பொழுது, அவரிடத்தில் வந்த ஏசாயா தீர்க்கதரிசி, "நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்தும், நீர் பிழைக்க மாட்டீர், மரித்துப் போவீர்" (2 இராஜா. 20:1) என்று கூறினார். இது ஒவ்வொருவருக்குமான நல்ல அறிவுரையாக உள்ளது.*

*என்னிடத்தில், "நீங்கள் இன்னும் ஒரு ஆண்டு மட்டுமே உயிர் வாழ்வீர்கள்" என்று கூறினால் எப்படி இருக்கும்? இந்தக் கேள்வியைக் குறித்துத் தேவையான அளவு ஆழ்ந்து சிந்தித்த பிறகு நான் அடைந்த சில முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.*

## இது எனக்கு மதிப்பீடுகள் பற்றிய ஒரு புதுக் கருத்துணர்வைத் தரும்

*இப்பொழுது முக்கியமானதாய்க் காணப்படுகின்றவற்றில் பெரும் பாலானவை படிப்படியாக அற்பமானவைகளாகி விடும். ஏவுதல் பெற்ற எழுத்தாளரின் வார்த்தைகள் இதற்கு அர்த்தம் சேர்ப்பதாயிருக்கும்: "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டான வைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ*

*என்றென்றைக்கும் நிலைப்பான்'' (1 யோவா. 2:16, 17). என்னைப் பொறுத்தமட்டில், உலகமானது ஒரு குறுகிய ஆண்டில் கடந்து போவதாக இருக்கும். இவ்விதமாக, உலகப்படியான ஈர்ப்புகள் கடந்த காலத்தில் என்னிடம் பெற்றிருந்த அதே விதமான ஈடுபாட்டினை இப்போது பெற்றிருக்காது. "என்றென்றும் வாழ்வது" என்பதே எனது அடிப்படையான அக்கறையாக இருக்கும்.*

*இந்தக் கவனக்குவிப்பானது எனது வெளிக் கண்ணோட்டத்தை நிச்சயமாகவே மாற்றும்:*

*(1) அற்பமான விஷயங்கள் குறித்து நான் பொறுமையிழந்து போக மாட்டேன். எனக்கு எரிச்சல் மூட்டும் சிறு விஷயங்கள் முக்கியமற்றவை களாகக் காணப்படும். நான் அதிகம் பொறுமையானவனாக, புரிந்து கொள்ளுபவனாக, இரக்கமுள்ளவனாக, அன்புசெய்கின்றவனாக ஆவேன். அன்பின் செயல்களும் வார்த்தைகளும் கட்டவிழ்க்கப்பட்டு பேசப்படாத வைகள் விளக்கப்படுத்தப்படும். ஒரு அழிவின் எப்படிப்பட்ட குறைபாடும் என்னைப் பாதிக்காது.*

*(2) நான் வாழ்வை அதிகம் மகிழ்வுடன் அநுபவிப்பேன். நாம் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகின்றார். பவுல், "மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்'' (பிலி. 3:1) என்று கூறினார். மேலும் அவர், "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லு கிறேன்" (பிலி. 4:4) என்றும் எழுதினார்.*

*நம்மில் மிகப்பலர், தவறான எஜமானைக் கொண்டிருக்கின்றோம். இந்த உலகமும் இதில் உள்ள யாவும் மனிதனுக்கு ஊழியம் செய்யும் நோக்கத்திற்காகவே உள்ளன - ஆனால் பலர் உலகத்திற்கு ஊழியக்காரர் களாகியுள்ளார்கள். ஒரு வாழ்வை ஏற்படுத்த, வாழ்வை மகிழ்வுடன் அனு பவிக்க நேரம் இல்லாதபடி நாம் பிழைப்புக்காகத் தீவிரமாய்ப் பாடுபடுவதில் ஈடுபட்டிருக்க முடியும். இன்னும் பல ஆண்டுகள் எனக்குள்ளன என்ற அனுமானத்தில், வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க நான் மிக அரிதாகவே நேரம் எடுக்கின்றேன்; ஆனால் ஒரு ஆண்டு மட்டுமே உள்ள நிலையில் நான் நேரத்தை ஏற்படுத்துவேன்.*

*இந்தப் புதிய வெளிக்கண்ணோக்கானது எனக்கு, உலகைப் பற்றிய ஒரு புதிய தோற்றக் காட்சியைக் கொடுப்பது மட்டுமின்றி, இது என்னைப் பற்றிய ஒரு புதிய மதிப்பீட்டையும் எனக்குக் கொடுக்கும். நம்மில் சிலர் நமது இயக்கங்களை மெதுவாக்குவதில்லை, ஏனென்றால் நமது உள்ளத்தின் ஆழத்தில் நாம், வாழ்வானது நாம் இல்லாமல் நடக்க முடியாது என்று நினைக்கின்றோம். இப்பொழுது இன்னும் ஒரு ஆண்டில் நான் இன்றியே வாழ்வானது நடைபெறப் போகின்றது என்ற உண்மையை எதிர்கொள்ள வேண்டும். பிறகு ஏன் முக்கியமற்றதாய்க் காணப்படுபவற்றைச் செய்வதில் நான் எனது சக்திகளை வீணாக்க வேண்டும்? நான் வாழ்வதற்கு இன்னும் ஓராண்டு மட்டுமே இருக்கிறதென்றால், நான் வாழ்வை இன்னும் அதிகமாய் மகிழ்வுடன் அனுபவிக்க முயற்சி செய்வேன் என்றே நினைக்கின்றேன்.*

*(3) நான் எனது நேரத்தை அதிக ஞானமாய்ப் பயன்படுத்துவேன். நம்மில் பலர் (நமது) நேரத்தை, ஏதோ நாம் தீரவே தீராத (கால) வைப்பறையைக் கொண்டுள்ளது போன்ற எண்ணத்திலேயே செலவழித்துக் கொண்டிருக்கின்றோம். நேரம் எவ்வளவு மதிப்புள்ளது என்பதை நாம் அறிவதில்லை. அமெரிக்க அரசியலாளர்களில் ஒருவரான பென் ஃபிராங்க்ளின் என்பவர், "நீங்கள் வாழ்வை நேசிக்கின்றீர்களா? ஆம் என்றால், காலத்தை வீணடிக்காதீர்கள்; ஏனென்றால் (காலம் என்ற) அந்தப் பொருளினால் தான் வாழ்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்று கூறினார். பவுல், "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப்[3] பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (எபே. 5:15, 16) என்று கூறினார்.*

*நம்மில் பலர், நாம் செய்து முடிக்க விரும்புகின்ற திட்டங்களைக் கொண்டுள்ளோம், ஆனால் அவைகளைச் செய்ய நமக்கு நேரம் இல்லை என்று கூறுகின்றோம். உண்மை அறியப்பட்டதென்றால், நாம் அவற்றைச் செய்யப் போதுமான நேரத்தை வீணாக்கியிருப்பது வெளியாகும். நான் ஒரு புத்தகத்தை எழுதும் பணியில் சில ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளேன், ஆனால் அதை முடிக்க "நேரம் காண" என்னால் இயலவில்லை. சமீபத்தில் நான், ஒரு மனிதர் பற்றிய செய்தியை வாசித்தேன் - அவர் தமது வழக்கமான வேலைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருபதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார் - அதாவது அவர் ஒவ்வொரு நாளும் தாம் வழக்கமாகத் துயில் நீங்கி எழும் நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே எழுந்து அந்த நேரத்தை எழுதுவதில் செலவிட்டுள்ளார். நாம் வீணாக்கியுள்ள நேரத்தைக் கொண்டு எவ்வளவு மேன்மையான பணிகளை நாம் நிறைவேற்றியிருக்கலாம்! வாழ்வதற்கு ஓராண்டு இருக்கையில், ஒவ்வொரு நிமிடமும் அதை முழுமையாய்ப் பயன்படுத்துவதற்கான விலையேறப் பெற்ற வெகுமதியாய் இருக்கும்.*

*இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் - இரண்டு அல்லது மூன்று மணிகள்;*
*இவைகள் நமது இந்த வாழ்வில் எதை அர்த்தப்படுத்துகின்றன?*
*காலம் என்றெண்ணப்பட்ட வகையில் மிக அதிகமாய் இல்லை,*
*ஆனால் நிமிடங்கள் பொன் போன்றவை மற்றும் மணிகள் மிகவும் உயர்ந்தவை.*
*நாம் இவற்றை,*
*யாரோ ஒருவரை மகிழ்விக்க, யாரோ ஒருவரைப் புன்முறுவல் பூக்க வைக்க,*
*ஒரு சிறு குழந்தையின் கண்ணீரைக் காய வைக்க,*
*எப்பொழுதாவது பயன்படுத்தினால்,*
*ஒரு மணியானது பல ஆண்டுகளின் கலக்கங்களைத் துடைத் தெறிகின்றது.*
*எனது காலத்தின் நிமிடங்கள் எங்காவது நம்பிக்கையின்மையை*
*ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம், எனக்கு ஒரு நண்பனைத் தாருங்கள்.[4]*

*(4) மிக முக்கியமாக, எனது புதிய மதிப்பீடுகள் ஆவிக்குரியவைகளுக்கு முதலிடம் தருவதில் எனக்கு உதவும். நாம் எப்பொழுதும் இந்த முன்னுரிமையைக் கொண்டிருக்க வேண்டும் என்றே தேவன் எப்பொழுதும் நோக்கம் கொண்டிருக்கின்றார் (மத். 6:33), ஆனால் பெரும்பாலான மக்கள் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியற்றில் இருந்து விலகிச் சென்றுள்ளார்கள். பொருளின் தற்காலிக இயல்பானது தெளிவாய் இருக்கையில், எனது வாழ்வானது நித்தியத்தை நோக்கி கவனம் செலுத்துவதாக இருக்கும். பின்வருவது போன்ற வசனப் பகுதிகள் எனக்குப் புதிய அர்த்தம் கொண்டவைகளாயிருக்கும்: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத். 16:26).*

*நான் உயிர்வாழ இன்னும் ஓராண்டு மட்டுமே இருக்கும் என்றால், எனது வெளிக் கண்ணோக்கானது நிச்சயமாகவே மாற்றம் அடைந்ததாயிருக்கும்.*

## கடந்த காலத்தைச் சுத்தமாக்க ஒவ்வொரு முயற்சியையும் நான் மேற்கொள்ளுவேன்

*மரணத்தை எதிர்கொள்ளுதல் என்பது என்னைச் சில வழிகளில், ஆத்தும ஆராய்வு செய்யும் சுய பரிசோதனையில் ஈடுபட வழி நடத்தும். ஒரு குறுகிய காலத்தில் நான் தேவனுக்கு முன்பாக நிற்கப் போகையில் அவர் என்னிடத்தில், "இதோ, நீ தவற விட்ட சில விஷயங்கள் உள்ளன" என்று கூறுவதைக் கேட்க நான் விரும்ப மாட்டேன். ஆதாமிடத்தில் தேவன் கேட்ட "நீ எங்கே இருக்கிறாய்?" (ஆதி. 3:9) என்ற கேள்வியைச் சற்று ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த வசனப் பகுதியின்மீது மூன்று கூற்றுக்களைக் கவனம் செலுத்தி ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கியார் ஒருவர் எடுத்துரைத்தார்: (1) "ஒவ்வொருவரும் ஏதோ ஓரிடத்தில் இருக்கின்றனர்," (2) "ஏராளமான மக்கள் தாங்கள் இருக்கக் கூடாத இடத்தில் இருக்கின்றனர்" மற்றும் (3) "தாங்கள் இருக்கக் கூடாத இடத்தில் இருக்கின்றவர்கள் தாங்கள் இருக்க விரும்பாத இடத்தில் இருக்கப் போகிறார்கள்!" ஆவிக்குரிய வகையில் நான் எங்கு இருக்க வேண்டும் என்பது எனக்கு மிக முக்கியமானதாகிவிடும்.*

*வாழ்வதற்கு ஓராண்டு மட்டுமே இருக்கின்ற நிலையில், நான் எதிரிகளை/பகைவர்களைப் பெற்றிருக்க முடியாது. நான் என் சக மனிதருடன் உள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்வேன். கிறிஸ்து "... முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி ..." (மத். 5:24) என்று கூறினார். "நான் வருத்தப்படுகின்றேன். என்னை மன்னிப்பீர்களா?" என்று கூறுவதிலிருந்து என்னை கர்வமோ அல்லது சுய நலமோ இனியும் தடை செய்யாது. மற்றும், கர்த்தருடைய மன்னிப்புக்காகக் கொண்டுள்ள ஏக்கத்துடன் நான் மற்றவர்களுக்கெதிராக குரோதங்கள் கொண்டிருக்க மாட்டேன் (மத். 6:14, 15).*

*பிறகு நான் தேவனுடனான எனது கடந்த காலத்தைச் சுத்திகரிக்க*

*விரும்புவேன். நாம் சத்தியத்தை எதிர்கொள்ளுவோம்: நாம் என்ன செய்ய வேண்டும் என்று அறிந்துள்ளவற்றிலிருந்து நாம் யாவருமே விழுந்து போயிருக்கின்றோம். ஒரு மாதத்திற்கு ஒருமுறை பிரசங்கித்துக் கொண்டிருந்த ஒரு சபைக் குழுமத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அவர்கள் ஏன் அதிகம் அடிக்கடி (வாரத்திற்கொருமுறை) பிரசங்கிப்பதில்லை என்று நான் கேட்ட பொழுது, உறுப்பினர் ஒருவர், "அது எந்த நன்மையை யும் செய்யாது; நாங்கள் செய்து கொண்டிருப்பதற்கும் மேலாகவே நாங்கள் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம்'' என்று கூறினார். அவர்கள் பிரசங்கித் தலைப் பற்றித் தவறான கருத்துக் கொண்டிருந்தனர் - அது ஊக்குவித்தலாய் இருக்க முடியும் - ஆனால் அவர்களின் கூற்றானது நம் எல்லாருக்கும் உண்மையாய் உள்ளது. நாம் யாவருமே நாம் செய்கின்றதற்கும் அதிகமாக அறிந்துள்ளோம். அதை ''பாவம்'' என்று வேதாகமம் அழைக்கின்றது: ''ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக். 4:17).*

*சுய இருப்பைச் சோதிக்கையில், எனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஒரு பாவம் எவ்வளவு சிறியதாகத் தோன்றினாலும், அதைத் திருத்தங்கள் செய்து கொள்ளும்படிக்கு, நான் எங்கெல்லாம் ''இலக்கைத் தவற விட்டேன்''[5] என்று காண்பேன். ஒரு சிறு செம்புள்ளியானது மிகப் பரவலாகும் தொற்றுக்கு அடையாளக் குறிப்பாக இருக்க முடியும். சிறு கறையான்கள் ஒரு வீட்டை அழிக்கக் கூடும். மனிதரின் வாழ்வில் "ஒரு சிறு மதியீனம்'' என்பது பரிமளத் தைலத்தில் செத்த ஈக்கள் இருப்பதைப் போன்றதாக உள்ளது (பிர. 10:1): அது அவர் செய்துள்ள எந்த நன்மையையும் ஒன்றுமற்றதாக்க முடியும். நான் எங்கு தவறியிருக்கிறேன் என்பதைக் கண்டறிந்து - ''பெரிய'' அல்லது ''சிறிய'' பாவங்கள் எல்லாவற்றையும் வெளியாக்கி - எனது வாழ்வை வேத வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதால் கண்டறிவதே எனது பணியாக இருக்கும்.*

*எனது வாழ்வில் பாவம் உள்ளதென்பதைக் கண்டு பிடித்து - மற்றும் அதை ஒப்புக் கொண்டு - ள்ள நிலையில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று நான் அறிகின்றேன். கிறிஸ்தவரல்லாத ஒருவர் தம் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியது அவசியமாய் உள்ளது, மற்றும் அவர், பாவ நிவாரணப் பலியென்ற வகையில், இயேசுவின்மேல் தம் நம்பிக்கையை வைத்து, அவரது மரணத்திற்குள்ளாக்கும்படி ஞானஸ்நானம்[6] பெற வேண்டும் (அப். 2:36-38; ரோமர் 6:3-6). நான் தேவனுடைய பிள்ளையாய் இருப்பதால், ஆனாலும் எனக்கு மன்னிப்பு அளிக்க வித்தியாசமான பிரமாணம் ஒன்றுள்ளது: எனது பாவங்கள் தேவனும் நானும் மட்டுமே அறிந்தவைகளாய் இருந்தால், நான் தேவனுடன் தனிமையில் அவற்றைக் கையாள முடியும். தவறு செய்த கிறிஸ்தவரிடம் பேதுரு, "ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப் படலாம்'' (அப். 8:22) என்று கூறினார். மற்றவர்கள் என் பாவத்தை அறிந்திருந்தால், நான் எனது செல்வாக்கு பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அவர்களிடம் ஜெபங்களையும் மன்னிப்பையும் கேட்பேன். யாக்கோபு,*

*“நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் ...” (யாக். 5:16) என்று கூறினார்.*

*நான் அறிந்த பாவங்களைக் குறித்துக் கவனம் செலுத்திய பிறகு, நான் முழங்கால் படியிட்டு, நான் அறிந்திராத பாவங்களைக் குறித்து - தாவீதைப் போல - ஜெபிப்பேன்: “தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்’’ (சங். 19:12). நான் திருத்திக் கொள்ளக் கூடும்படிக்கு அப்படிப்பட்ட குற்றங்களைக் கண்டறிய தேவன் எனக்கு உதவ வேண்டும் என்பதே எனது ஜெபமாய் இருக்கும்.*

*இன்னும் ஒரே ஒரு ஆண்டு மட்டுமே நான் உயிர் வாழ்வேனென்றால், எனது கடந்த காலத்தைச் சுத்தப்படுத்த நான் எல்லா வித முயற்சிகளையும் மேற்கொள்வேன்.*

## எதிர்கால அளிப்பிற்கென்று என்னால் முடிந்தளவு மிகச் சிறந்தவற்றைச் செய்வேன்

*அடுத்து, நான் என்னிடமே, “இந்த வாழ்வை விட்டுப் பிரியும் முன்பு நான் அளித்துத் தீர்க்க வேண்டிய பொறுப்புகள் யாவை?” என்று கேட்டுக் கொள்வேன். எனது முதல் சிந்தனை என்னுடைய குடும்பத்திற்கானதாக இருக்கும்; அவர்களின் சரீர நன்மை என்னால் இயன்ற அளவு மிகச் சிறந்ததாக இருக்கும்படி நிச்சயப்படுத்திக்கொள்வேன். “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்’’ (1 தீமோ. 5:8). இருப்பினும், அவர்களின் ஆவிக்குரிய நலனே என்னுடைய முதல் அக்கறையாய் இருக்கும். ஞானமுள்ள மனிதர் (சாலமோன்), “பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்” (நீதி. 22:6) என்று கூறினார். கடந்த காலத்தில் பயிற்றுவிக்க எவ்விதத்திலும் தவறியிருந்தால் அதைப் பற்றி என் இருதயம் கவலைப்படும் - மற்றும் வரும் ஆண்டில் அதை நான் திருத்திக் கொள்ள முயற்சி செய்வேன்.*

*பெற்றோருக்கு மோசேயின் அறிவுறுத்தல்களைச் செயல்படுத்துவதில் பிரயாசப்படுகின்ற வகையில் நான் அமர்ந்திருக்கையிலும், நடக்கையிலும், படுக்கையிலும், எழுகையிலும் எனது பிள்ளைகளுக்குக் கர்த்தரின் வழிகளைப் போதிப்பேன் (உபா. 6:7). எஞ்சியுள்ள குறுகிய காலத்தில், எனது இலக்கானது, அவர்கள் எதிர்காலத்தில் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள வர்களாய் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதாகவே இருக்கும். நான் எனது பிள்ளைகளுடன் வேதம் படித்து, ஆராதித்து, அவர்கள் சபையில் வேதாகம வகுப்புகளுக்குச் செல்லுவதை நிச்சயப்படுத்திக் கொள்வேன்;[7] அவர்கள் “நடக்க வேண்டிய வழியிலே” அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன்.*

*முடிந்ததென்றால், கிறிஸ்தவக் கல்வியின் மூலம் அவர்களின் எதிர் காலப் பயிற்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்வேன்.[8] ஒரு*

கிறிஸ்தவப் பள்ளியில் கிறிஸ்தவ ஆசிரியர்கள், கிறிஸ்தவத் தோழர்கள் மற்றும் ஒரு கிறிஸ்தவச் சூழ்நிலை என்பது அவர்கள் தங்கள் கிறிஸ்தவப் பயிற்சியைப் பெறுவதற்கு மிகச் சிறந்த இடங்களில் ஒன்றாக இருக்கும்.

பிறகு, என்னுடைய பொறுப்புகள் பற்றி நினைப்பதில், நான் பொதுவாகக் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வது பற்றி சிந்திப்பேன். பவுலின் பின்வரும் வார்த்தைகள் எனக்குப் பயன்படுத்தப்பட முடியும்:

> ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனுண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் (பிலி. 1:22-24).

கடந்த காலத்தைச் சுத்தப்படுத்தியிருப்பதில், எனது பிரிந்து செல்லுதலானது எனக்குப் பயனுள்ளதாக இருக்கும் - ஆனால் அது கர்த்தருக்கு எனது ஊழியங்களை முடிப்பதாயிருக்கும். இது கிறிஸ்துவினிமித்தமாக நல்லதாயிருக்காது. என்னுடைய உயிலில் கர்த்தருடைய ஊழியத்தை நினைவுகூர்வதினால் அது தொடருவதற்கு நான் உதவ முடியும்.[9]

எனது இடத்தில் கர்த்தருடைய ஊழியத்தை நடத்திச் செல்லக்கூடிய ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு உட்படுத்துவது கர்த்தருடைய ஊழியத்திற்கு நான் அளிக்கக் கூடிய மிகச் சிறந்த அளிப்பின் வழியாய் இருக்கும். எஞ்சியுள்ள எனது ஆண்டில் நான் ஒரு ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தக் கடினமாய் உழைப்பேன். தேவனுடைய வசனம் வெறுமையாய்த் தம்மிடம் திரும்பி வராது என்றும் (ஏசா. 55:11) மற்றும் போதனையின் இயல்பான விளைவாக இருப்பது ஞானஸ்நானம் (மத். 28:19) என்றும் தேவனே கூறியுள்ளார். மற்றும் அவர், எதிர் நோக்கியுள்ளவர்களுக்கு வாய்ப்பின் "திறந்த கதவுகளை" கொடுக்கிறார் என்றும் காண்பித்துள்ளார் (1 கொரி. 16:9). ஒருவர் ஒரு ஆண்டில் ஒரு ஆத்துமாவை இரட்சிப்புக்கு உட்படுத்த உண்மையிலேயே விரும்பினால் தேவன் அவருக்கு அந்த வாய்ப்பைத் தருவார் என்று நான் விசுவாசிக்கின்றேன்.

ஆத்தும இரட்சிப்பில் இந்த முயற்சியானது உலகின் நலனுக்கு என்னால் ஏற்படுத்தக் கூடிய மாபெரும் பங்களிப்பாயிருக்கும். பலர் தாங்கள் மறக்கப்பட்டு விடாதபடிக்குத் தங்களின் இறுதி நாட்களை நினைவுச் சின்னங்கள் எழுப்புவதில் செலவிட்டார்கள். பிரமிடுகள் என்பவை அரசர்களின் கல்லறைகளேயன்றி வேறென்னவாக உள்ளன? இன்றைய நாட்களில் நாம் அந்தப் பிரமிடுகளைப் பற்றி அதிகமாகவும், ஆனால் அந்த அரசர்களைப் பற்றிக் கொஞ்சமாகவும் அறிந்துள்ளோம். பூமிக்குரிய நினைவுச் சின்னங்கள் அவற்றின் அர்த்தத்தை இழந்து விடுகின்றன. இருப்பினும் நாம் ஆத்தும இரட்சிப்பில் ஈடுபடுகையில், முடிவற்ற உயிர் வாழும் நினைவுச் சின்னம் ஒன்றை நாம் தொடங்குகின்றோம். அந்த

*ஆத்துமாவானது மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும், அவர்கள் இன்னும் மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவார்கள். மீட்பின் நிறைவான சங்கிலித் தொடரானது முடிவின்றிச் செல்லுகின்றது.*

*நான் உயிர்வாழ ஒரே ஒரு ஆண்டு மட்டும் இருந்ததென்றால், கர்த்தரின் ஊழியத்திற்கு எதிர்கால அளிப்புகள் தர நான் விரும்புவேன் - மற்றும் எனது சொந்த எதிர்காலத்திற்கும் (பலன்) அளிக்கவும் விரும்புவேன்.*

## நான் எனது ஆவிக்குரிய வாழ்வை மேம்படுத்துவேன்

*ஒரே ஒரு ஆண்டிற்குள் எனது ஆத்துமாவானது ஆவியாயிருக்கிற தேவனுடைய (யோவா. 4:24) பிரசன்னத்திற்குக் கடந்து போகும். அவருடைய சந்நிதானத்தில் ஆவிக்குரியது மட்டுமே உண்மை நிலையாய் இருக்கும். அந்தத் தெய்வீகச் சந்திப்புக்குத் தயாராவதற்கு நான் எனது ஆவிக்குரிய வாழ்வை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இரு சாலைகள் எனக்குத் திறந்திருக்கும். முதலாவது அதிகம் பொதுவானதாகவும் சபையாகிய சரீரத்தின் வாழ்வுடன் (எபே. 1:22, 23) தொடர்புடையதாகவும் உள்ளது. சபையின் ஆராதனைகள் அனைத்திலும் கலந்து கொள்ள நான் முயற்சி செய்வேன், ஏனென்றால் அவ்வாறு நான் செய்ய வேண்டும் என்றுதான் தேவன் விரும்புகின்றார் (எபி. 10:25), மற்றும் அவைகள் (அந்த ஆராதனைகள்) என்னை ஆவிக்குரிய முறையில் பலப்படுத்துகின்றதாலும் நான் அவற்றில் கலந்து கொள்ளுவேன். சபையின் ஊழியத்தில் சுறுசுறுப்பான பகுதியொன்றை நான் மேற்கொள்ளு வேன், கடந்த காலத்தில் அதிகமாய் ஊழியம் செய்யும்படியாக நான் எனது தாலந்துகளையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளாதிருந்தது பற்றிக் கவலைப்படுவேன். யாராலும் கேட்டுக் கொள்ளப்படுவதற்காகக் காத்திராமல் எனது ஊழியங்களை நான் தன்னார்வத்துடன் செய்வேன் மற்றும் என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன், இவற்றை இயேசு "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" (மத். 25:21அ) என்று கூறுவதைக் கேட்பதற்கு ஏக்கத்துடன் செய்வேன்.*

*மற்றும், நான் எனது முயற்சிகளில் அதிகம் சீராய் இருப்பதற்கு முயற்சி செய்வேன். சில வேளைகளில் நான் கர்த்தருடைய ஊழியத்தில் "அனல்" மற்றும் "குளிர்" ஆகியவற்றிற்கிடையில் அலைவுபடச் சாய்ந்திருக்கின்றேன். தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் "உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42) என்று நாம் வாசிக்கின்றோம். பவுல், "நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1 கொரி. 15:58) என்று கூறினார். இயேசு தாமே, தம்மைப் பின்பற்றுவோர்களில் வெதுவெதுப்பாய் இருப்பவர்களைத் தாம் வெறுக்கின்றதாகக் கூறினார் (வெளி. 3:16). எனது கடைசி ஆண்டில், நான் கர்த்தருடைய ஊழியத்தில் எப்பொழுதுமே "அனலாய்" இருக்க விரும்புவேன். யாரோ ஒருவர் பின்வருமாறு எழுதினார்:*

*ஒரே ஒரு வாழ்வுண்டு,*
*அதுவும் சீக்கிரம் கடந்து போகும்;*
*கிறிஸ்துவுக்காகச் செய்தவை மட்டுமே*
*நிலைத்து நிற்கும்.*[10]

*ஆவிக்குரியவற்றை மேம்படுத்திக் கொள்ளும் இரண்டாவது சாலையானது இயல்பில் அதிகம் தனிப்பட்டதாக உள்ளது. நான் எனது வேதாகமத்தைக் கிரமமாக படிப்பேன். அதைச் செய்யத் தவறுவதற்கு "நான் மிகவும் களைப்பாய் இருக்கின்றேன்'' அல்லது ''எனக்கு நேரம் கிடைக்கவில்லை" என்பது போன்ற சாக்குப் போக்குகள் எதுவும் இராது. நேர்மையாய்க் கூறுவதென்றால், இப்பொழுது நான் தேவனுடைய வசனத்துடன் செலவிடும் நேரத்தைக் காட்டிலும் அதிகமான நேரத்தை செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றுடன் செலவிடுகின்றேன். உலகப்படியான விஷயங்கள் தங்களின் ஈர்ப்புகளை இழந்து போக, நித்தியமானவற்றைப்பற்றிப் பேசுகின்ற வேதாகமத்திடம் அதிகம் அதிகமாய்த் திரும்புவது என்பது இயல்பானதாயிருக்கும். நான் "வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் ... தேவனுக்கு முன்பு உத்தமனாக" (2 தீமோ. 2:15) இருக்கும்படிக்கு எனது படிப்பில் "ஜாக்கிரதையாய்" இருக்க விரும்புவேன். வசனத்தினால் விசுவாசம் வருகின்றது என வேதாகமம் கூறுகின்றது (ரோமர் 10:17). எனது விசுவாசம் வளர்ந்து நான் புதிய சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஆதாயப்படுத்தியிருக்கையில், முன்பு எனது கால அட்டவணையில் கிரமமான வேதபாடத்தை உள்ளடக்காது இருந்தமைக்காக வருத்தப்படுவேன்.*

*கடைசியாக, நான் தேவனை விரைவிலேயே முகமுகமாய்த் தரிசிக்க இருப்பதால் அவருடன் நிலைத்த செய்தித் தொடர்பு கொள்ள விரும்புவேன். இது எவ்விதம் என்பதைப் பவுல் எனக்குக் கூறுகின்றார்: "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச. 5:17). கடந்த காலத்தில், எனது ஆசீர்வாதங்களுக்காக தேவனுக்கு நன்றி கூறுவதை, முடிவுகள் எடுப்பதில் ஞானத்திற்காகத் தேவனிடம் கேட்பதில், மற்றும் மன்னிப்புக்காக அவரிடம் மன்றாடுவதில் நான் தவறியிருக்கலாம். எஞ்சியுள்ள வரையரைக்குட்பட்ட கால அளவில் நான் அவருடன் பேசுவதற்குப் பல மணி நேரங்களைச் செலவிடுவேன். கடந்த காலத்தில் இரண்டு நிமிட ஜெபம் கூட எனது ஆவிக்குரிய தன்மையை அவதிக்குள்ளாக்கி இருக்கலாம், ஆனால் இப்பொழுது ஒரு மணி நேர ஜெபம் கூட எனது சிந்தனை எல்லாவற்றையும் கொள்ளாத அளவுக்கு அவ்வளவு முழுமையானதாக இருக்கும்.*

*ஆம், உயிர் வாழ எனக்கு ஒரு ஆண்டு மட்டுமே இருந்தால், பரலோகம் என்றழைக்கப்படும் ஆயத்தம் பண்ணப்பட்ட இடத்திற்காக (யோவா. 14:3) என்னை ஆயத்தம் செய்து கொள்வதற்கு எனது ஆவிக்குரிய தன்மையை முழுமையாக மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்வேன்.*

## முடிவுரை

*"உ,யிர்வாழ எனக்கு ஓராண்டு மட்டும் இருந்தால் எப்படியிருக்கும்?" என்ற கேள்வியை ஆழ்ந்து சிந்தித்தபோது நான் அடைந்த ஒரு சில முடிவுகள் மேலே கூறப்பட்டன. இந்தக் கேள்வியை எச்சரிக்கையுடன்/கவனத்துடன் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அச்சிந்தனையானது எவரொவரின் வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.*

*ஒவ்வொரு ஆண்டும் அல்லது மாதமும் அல்லது வாரமும் அல்லது நாளும், அதுதான் நாம் பூமியில் இருக்கும் நமது கடைசிக் காலம் என்பது போலவே வாழ வேண்டும். ஜான் வெஸ்லியிடம் அவர் பூமியில் இருக்கப் போகும் கடைசி நாள் என்று அறிந்தால் அந்த நாளில் எவ்வாறு வாழ்வார் என்று கேட்கப்பட்ட போது அவர் பின்வருமாறு பதில் அளித்தார்: "ஏன், அதை நான் இப்பொழுதே செலவிட விரும்பும் வகையிலேயே இருக்கின்றேன். இன்று மாலை நான் கிளெவ்செஸ்ட்டரில் பிரசங்கிக்க வேண்டும் மற்றும் நாளை காலை 5 மணிக்கு மீண்டும் பிரசங்கிக்க வேண்டும் ... பின்பு நான் மார்ட்டினின் இல்லத்தில் இளைப்பாறி, அக்குடும்பத் தாருடன் உரையாடவும் ஜெபிக்கவும் வேண்டும், பிறகு வழக்கம் போல 10 மணிக்கு எனது அறைக்குச் சென்று ஓய்வெடுக்க வேண்டும், அங்கு என்னை எனது பரலோக பிதாவிடம் ஒப்புவித்து, ஓய்வெடுக்கப் படுத்து மற்றும் மகிமையில் எழுந்திருக்க [நம்பிக்கையாயிருப்பேன்]."[11] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் இந்த பூமியில் வாழ்ந்திருந்த மற்ற நாட்களில் போலவே தம் கடைசி நாளிலும் வாழ்வதாகக் கூறினார். நாம் எப்பொழுதுமே இறந்து போகத் தயாராயிருக்க வேண்டும்; ஏனெனில் நாம் இறப்பதற்குத் தயாராயில்லையென்றால் வாழத் தயாராயிருப்பதில்லை.*

*நீங்கள் உயிர் வாழ ஓராண்டு மட்டும் இருந்தால் எப்படியிருக்கும்? நீங்கள் தயாராயிருப்பீர்களா? நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றுள்ளீர்களா? (அப். 2:38)? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், உண்மையுள்ளவர்களாய் இருந்துள்ளீர்களா? (வெளி. 2:10) நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தால் அதை இப்பொழுதே செய்யுங்கள்!*

---

*குறிப்புகள்*

[1]*நீங்கள் இப்பாடத்தைப் பயன்படுத்தும் போதெல்லாம் நடப்பு ஆண்டைப் பயன்படுத்துங்கள். இந்தப் பிரசங்கத்தின் முந்திய பதிப்பு ஒன்று The Day Christ Came (Again) and Other Sermons* (Dallas: Christian Publishing Co., 1965), 198-210 *என்ற நூலில் வெளியாயிற்று.* [2]*Poor Richard's Almanac* (June 1746), quoted in John Bartlett, *Familiar Quotations,* 16th ed., gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 310. [3]KJV*யில்* "redeeming the time" *என்றுள்ளது. மூல மொழியானது* "buying up the opportunity" *என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.* [4]*எழுதியவர் அறியப்படவில்லை.* [5]"Sin" *என்ற வார்த்தை அடிப்படையாக, ''இலக்கைத் தவறவிடுதல்'' என்று அர்த்தப்படுகின்றது.* [6]*ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழுக்காட்டப்படுதலாகும்.*

[7]*உங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கு உங்கள் பகுதியில் உள்ள வாய்ப்புக்களைக் குறிப்பிடுங்கள். உலகில் நான் வாழும் பகுதியில், இதில் கோடைகால வேதாகம முகாம்கள் மற்றும் சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆகியவை உள்ளடக்கப்படும்.* [8]*இந்த வாய்ப்பு எல்லா இடங்களிலும் கிடைப்பதில்லை, ஆனால் இது கிடைக்கின்ற இடங்களுக்கு இதை வலியுறுத்த நான் விரும்புகின்றேன்.* [9]*எடுத்துக்காட்டாக, ஒரு நபர் தனது உயிலில் உள்ளூர் சபையை உள்ளடக்கக் கூடும். அத்துடன் இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளி போன்ற நல்ல ஊழியங்களையும் உள்ளடக்கக் கூடும்.* [10]*எழுதியவர் அறியப்படவில்லை.*

[11]Quoted in Archibald Naismith, 2400 *Outlines, Notes, Quotes and Anecdotes for Sermons* (Grand Rapids, Mich.: Baker Book House, 1975), 234.



-